C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 MAY 2024 ஆகாரம் : 05

## “கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்

## அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்”

மத்தேயு 25:21

You have been faithful with a few things;

*“I will put you in charge of many things”*

MATTHEW 25:21

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER - 0567668348 |
| 1ST SAT<br>9.15PM | EVERY FIRST SATURDAY,<br>CBS TEACHERS MEETING,<br>CHURCH HALL,<br>MRS. DIVYA SHERIN- 0563973466. |
| SAT<br>7.30 PM<br>9.00 PM | 1ST AND 3RD SATURDAY<br>HOLY COMMUNION SERVICE<br>CONTACT: THE PRESBYTER - 0567668348 |
| 2ND SAT<br>9.00 PM<br>9.30 PM | 2 ND SATURDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR - 0508429659 |
| 3RD FRI<br>7.00 PM<br>8.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS.SAGENA LIVINGSTON - 0553896871 |
| 4TH FRI<br>7.00 PM<br>8.00 PM | 4 TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR.STEPHEN CHELLARAJ - 0569906933 |



# FROM THE PASTOR'S DESK

**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

### முன்னுரை:

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் (மத்தேயு 28:6) உயிர்த்தெழுதலே கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாய் இருக்கிறது. யோவான் 14:1—ல் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக இருப்பதாக என்றும்,நான் போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறேன் என்றும் சொன்ன ஆண்டவரின் வாக்கு நிறைவேறியது,அவர் உயிர்த்தெழுந்தார் விண்ணகம் சென்றார்.ஆண்டவர் இயேசு சொன்னது, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் (யோவான் 14:6) எனவே ஆண்டவர் இயேசுவின் திருப்பாதங்களை நாம் பற்றிக் கொள்வோம்.

### பயப்படாதிருங்கள்:

ஆண்டவரே இயேசுவின் பிறப்புச் செய்தி மேய்ப்பர்கள் இடையே சொல்லப்பட்ட போது முதலாவது கூறிய வார்த்தையும், ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் பெண்களிடம் கூறப்பட்ட வார்த்தையும் "பயப்படாதிருங்கள்" (லூக்கா 2:10 & மத்தேயு 28:5) என்பதுவே.

கி.பி.1505 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் பிறந்த ஜான் நாக்ஸ் என்கிற ஆண்டவரின் ஊழியர், ஒரு சிறந்த ஜெப வீரர் ஆவார். அவர் இரவும் பகலும் ஜெபம் செய்து ஆண்டவரே நோக்கி வேண்டியது, "ஆண்டவரே ஸ்காட்லாந்து தேசத்தை எனக்குத் தாரும், இல்லாவிட்டால் நான் இறந்து போகட்டும் என்பதுவே"இவர் ஸ்காட்லாந்து தேசத்தின் மோசே என்றும், ஆமோஸ் என்றும் குறிப்பிடபடுகின்றார். காரணம் எதற்கும் பயப்படாமல் ஆண்டவருக்கு என்று அர்ப்பணிப்போடு திருப்பணியை செய்தவர். கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று வெகு தைரியத்தோடு திருப்பணி செய்தவர். அக்காலத்தில்,ஸ்காட்லாந்து தேசத்தின் ராணியாக ஆட்சி புரிந்த மேரி ஸ்டுவர்ட் இவரை ரத்த வெறிபிடித்த மீறி என்று வரலாறு சொல்லுகிறது. அவ்வளவு கொடுமையாக ஆட்சி புரிந்துள்ளார், அப்படிப்பட்டவர் கூறும் பொழுது, ராணுவத்தை குறித்துக் கூட எனக்கு பயம் இல்ல. ஆனால் ஜான் நாக்ஸை

பார்க்கும் பொழுது, அந்த மனிதன் முழங்காலில் ஜெபிக்கும் பொழுது எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது என்று சொன்னார். ஜான் நாக்ஸ் அவர்களை மதபுரட்டர் என்று ராணி மேரி சிறையில் அடைத்தார்.ஆனால் கலங்காமல் சிறைவாசத்திற்குப் பின்னர் வந்து, தொடர்ந்து ஆண்டவரின் திருப்பணி செய்தார். இதற்கான காரணம் ஆண்டவரை இவர் பற்றிக் கொண்டிருந்ததே. முழங்காலில் நின்று ஆயிரம் முறை திருமறையை முழுவதும் படித்து,இரவும் பகலும் ஜெபித்துள்ளார். எனவே பயம் இல்லாமல் இவர் வாழ்ந்து 1572 ஆம் ஆண்டு இறை அழைப்பை ஏற்றுள்ளார்.

**பணிந்திடுங்கள்:**

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை தூதர்கள் சொல்லக் கேட்டு,அதை சீடர்களுக்கு அறிவிக்கப் பெண்கள் போகிறபோது,இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு,வாழ்க என்றார்.அப்போது பெண்கள் ஆண்டவரின் திருப்பாதங்களை தழுவி,அவரை பணிந்து கொண்டார்கள்.(மத்தேயு 28:9) பிரியமானவர்களே, ஆண்டவரை தேடி அவரைப்பற்றிக்கொண்டு, அவருக்கு சாட்சியாக வாழும் பொழுது அவரே நம்மை தேடி வருகின்றவராக இருக்கின்றார். எனவே, உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை இறுகப்பற்றிக் கொண்டு, அவரையே பணிந்து வாழ்ந்திடுவோம் ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென். இறைபணியில்,ஆயர்

இறைப்பணியில்,ஆயர்.

## Rev. S.Baktha Thiyagarajan





# லோத்தின் மனைவி & மகதலேனா மரியாள்



கிறிஸ்துவுக்குள் அன்பான இறை அன்பர்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

## பின்னோக்கினவர்:

அது ஒரு செழிப்பான நகரம், வளமான நகரம், செழுமையான நகரம். அதன் மறுபக்கமோ அக்கிரமத்தின் உச்சம் நிறைந்த நகரம், அதுதான் சோதோம் நகரம்.இதைக் குறித்து ஆதியாகமம் 19 ஆம் அதிகாரம் மிகத் தெளிவாக நமக்கு விளக்குகிறது. இந்த சோதோமை அழிக்க ஆண்டவர் தூதர்களை அனுப்புகின்றார். அங்கே ஆபிரகாமின் உறவை சார்ந்த லோத்தையும் அவரின் குடும்பத்தையும் காப்பாற்ற இந்த தகவலை தூதர்கள் தெரிவிக்கின்றார்கள். லோத்து அவர்தன் மனைவி மற்றும் மகள்களை அழைத்துக் கொண்டு, குடும்பமாக விரைந்து செல்லுங்கள்,சம பூமியில் நில்லாதிருங்கள், திரும்பி பாராதிருங்கள் என்று கூறி துரிதப்படுத்துகின்றனர்.ஆனால் லோத்தின் மனைவியோ பின்னிட்டு பார்த்து உப்பு தூணாக மாறிப் போனார். (ஆதியாகமம் 19:26) காரணம் லோத்தின் மனைவிக்கு தான் சம்பாதித்த பொருட்கள், சொத்துக்கள் என்று உலகம் சார்ந்த விஷயங்கள் என்னவாகிறதோ என்று பின்னிட்டு பார்த்தார் லோத்தின் மனைவி உப்புத்தூண் ஆனார். அன்பானவர்களே, இன்றைக்கும் உலகத்தின் மீது பற்று கொண்டு பின்னோக்கி அல்லது உலகத்தைப் பற்றிக் கொள்ளும் பொழுது நமது நிலைமை என்ன என்பதை சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.அன்றைக்கு அக்கிரமம் மிகுந்த ஆண்டவர் சோதோமை அழிக்க முற்பட்டபோது, லோத்துவின் குடும்பத்திற்கு கிடைக்கப்பெற்ற கிருபை அதை தவறவிட்டார் லோத்தின் மனைவி. எனவே இந்தக் கிருபையின் காலத்தில் பின்னோக்கிப் பாராமல் அதாவது பாவம் சார்ந்த, அக்கிரமம் சார்ந்த, உலகம் சார்ந்ததிலையே உழன்று கொண்டு வாழாமல் ஆண்டவரையே நோக்குங்கள்.

## முன்னோக்கினவர்:

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தது தெரியாமல் கல்லறை அருகே பெண்கள் வாரத்தின் முதலாம் நாளிலே அதிகாலையில் விரைந்து ஓடி அங்கலாய்ப்போடு கல்லறையை பார்க்கின்றனர். அங்கே ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்ற செய்தியை தூதர்கள் பெண்களுக்கு கூறி நீங்கள் விரைவாக செல்லுங்கள்,இந்த செய்தியை சீடர்களுக்கு அறிவியுங்கள் என்று கூறப்பட்டு பெண்கள் வெகுவேகத்தோடு முன்னோக்கி சென்றனர். இயேசுவை கண்டனர், வாழ்த்துதலை பெற்றனர்,அவரை பணிந்து கொண்டனர்.

நிறைவாக,நாம் சிந்திக்கலாம் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளைநோக்கம் பொழுது ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார். நீங்கள் உங்கள் வாழ்வை சீர்தூக்கிப் பாருங்கள்,லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று,ஆண்டவர் இயேசு லூக்கா 17:32 -இல் குறிப்பிட்டு சொல்லுகிறார். நிறைவாக தூய பவுல் பிலிப்பியர் 3:13,14-ல் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கி எனக்கு நியமித்த ஓட்டத்திலே நான் ஓடிக்கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டு எழுதுகிறார். அன்பானவர்களே, உலகம் சார்ந்து பின்னானவைகளையும், உலகம் சார்ந்தவைகளையும் பற்றிக் கொண்டு வாழ்கிறோமா அல்லது முன்னான வைகளை நோக்கி உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை பற்றிக் கொண்டு வாழ்கிறோமா?நாம் சிந்திப்போம் நம் வாழ்வை சீர்தூக்கி செயல்படுவோம். ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

Mrs . P . Velanganni





# செயலர் மடல்

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதங்களில் நம்மை கர்த்தர் கண்மணியை போல் காத்தார்.**

நமது சிந்தனைக்கு, கிறிஸ்தவத்தின் முதுகெலும்பும் அடிப்படை சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் இருக்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் அவர் 40–நாட்கள் உலகில் தங்கியிருந்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும், தம்மை பின்பற்றியவர்களுக்கும் காட்சியளித்துப் பேசினார் என்று திருமறையில் வாசிக்கிறோம். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு மக்களுக்கு காட்சி அளித்த 12 சம்பவங்களை பற்றி நாம் படிக்கலாம்.

முதலாவதாக, மாற்கு 16 :1–ல் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு வாரத்தின் முதலாம் நாளில் மகதலேனா மரியாள் இயேசுவுக்கு சுகந்த வர்க்கமிட வந்தபோது, தேவதூதன் காட்சியளித்து இயேசு உயிர்த்தெழுந்தார் என்று அறிவித்தார். பின்பு மரியாள் இயேசுவின் உடல் கல்லறையில் இல்லையே என்று அழுது கொண்டிருந்த போது,இயேசு மரியாளைப் பார்த்து ஸ்திரியே ஏன் அழுகிறாய்? யாரை தேடுகிறாய்?என்று கேட்டு, காட்சியளித்தார்.

இரண்டாவதாக, மத்தேயு 28:9,10–ல் கல்லறையிலிருந்து திரும்பி வந்த பெண்களுக்கு (யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமி,மற்ற ஸ்திரீகள்) இயேசு எதிர்பட்டு அவர்களை வாழ்க என்று வாழ்த்தினார். அவர்கள் உடனே ஆச்சரியத்திலும், சந்தோஷத்திலும் இயேசுவின் பாதங்களை தழுவி, அவரைப்பணிந்து கொண்டார்கள்.

மூன்றாவதாக, லூக்கா 24:34–ல் இயேசு மூன்றுதரம் மறுதலித்து மனந்திரும்பின பேதுருவை ஆண்டவர் இயேசு மன்னித்து ஏற்றுக் கொண்டார் என்பதை தெரிவிப்பதற்காக, பேதுருவுக்கு தனிப்பட்ட விதத்தில் காட்சியளித்தார்.

நான்காவதாக, லூக்கா 24:13–32–ல் இரண்டு சீடர்கள் இயேசு உயிர்த்தெழுந்த நாளில் எருசலேமில் இருந்து 8 மைல் தூரத்தில் உள்ள எம்மாவூருக்கு போகிற வழியில் இயேசுவைப் பற்றி பேசிக்கொண்டே போகிறபோது, அவர்களுடனே  இயேசுவும் சென்று இணைந்துக் காட்சியளித்தார்.

ஐந்தாவதாக, லூக்கா 24:36–43–ல் தோமாவைத் தவிர மற்ற எல்லா சீடர்களும் இயேசுவைப்போல் தங்களையும் கொன்று போடுவார்கள் என்று பயந்து,கதவைப் பூட்டி ஒளிந்து கொண்டிருந்தபோது இயேசு அவர்களுக்கு காட்சி அளித்து உங்களுக்கு சமாதானம் என்றார்.

ஆறாவதாக, யோவான் 21:1–25–ல் தோமாவுடன் கூட எல்லா சீடர்களுக்கும் காட்சியளித்தார். தோமா விசுவாசியாதபடியால் இயேசு தோமாவிடம் வந்து உன் விரலை நீட்டி,என் கைகளை பார்.உன் கைகளை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு என்று கூறி காட்சியளித்தார்.

ஏழாவதாக, யோவான் 21:1–25–ல் திபேரியா கடற்கரையில் ஏழு சீடர்கள் மீன்களைப் பிடிக்கச் சென்றபோது விடியற்காலத்தில் உயிர்த்தெழுந்த இயேசு கரையில் நின்று அவர்களுக்கு வலது புறமாக வலையைப் போடச் சொல்லிக் காட்சி அளித்தார்.

எட்டாவதாக,  மத்தேயு 28:16–20 மற்றும் 1கொரிந்தியர் 15:6 பகுதிகளில் கலிலேயாவில் 500 பேருக்கும் அதிகமானவர்கள் காத்திருந்தபோது, இயேசு அவர்கள் எல்லாருக்கும் ஒரே நேரத்தில் காட்சி அளித்தார்.

ஒன்பதாவதாக, 1கொரிந்தியர் 15:7–ல் இயேசு யாக்கோபுக்கும் (இயேசுவின் சகோதரர், யாக்கோபு நிருபத்தினை எழுதியவர்) தனிப்பட்ட விதத்தில் தரிசனமானார்.

பத்தாவதாக, மத்தேயு 28:18,19–ல் இயேசு மறுபடியும் சீடர்களுக்கு தரிசனமானார். இந்த தரிசன காட்சியில் சீடர்கள் இயேசுவின் பிரதான கட்டளையை பெற்றார்கள்.

பதினொன்றாவதாக, அப்போஸ்தலர் 1:3–11–ல் இயேசு பரமேறுதலின் போது அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்ஜியத்துக்குரியவர்களை குறித்துப் பேசி அநேக தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடு இருக்கிறவராக காண்பித்துப் பரமேறிச் சென்றார்.

பனிரெண்டாவதாக, 1கொரிந்தியர் 15:8–ல் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு காட்சியளித்தார். தமஸ்குவில் சவுல் கர்த்தருடைய சீடர்களை பயமுறுத்தி கொலை செய்யும்படி போகையில், வானத்திலிருந்து ஒரு ஒளி பிரகாசித்து சவுலுக்கு தரிசனமாகி அதன் விளைவாக அவர் தன்னை அர்ப்பணித்து, ஒப்புக்கொடுத்தார். இயேசு உயிரோடு எழுந்து,நமக்காக பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்

கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் நமது திருச்சபையின் 2024 ஆம் ஆண்டின் விடுமுறை வேதாகம பள்ளியை (VBS) நேர்த்தியாக நடத்திட கர்த்தர் உதவி செய்தார்.அதனை சிறந்த முறையில் நடத்த உதவியாய் இருந்த திருச்சபையினர் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கிறோம். மேலும் அபுதாபி சி.எஸ்.ஐ திருச்சபையில் இருந்து வந்து இயக்குனர்களாக சிறப்பாக விடுமுறை வேதாகம பள்ளியை நடத்தித் தந்த அன்பர்களுக்கு மிகுந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன். நமக்கு இந்த அந்நிய தேசத்தில் ஆராதனை செய்ய இந்த அழகான சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபையை கர்த்தர் தந்திருக்கிறார் அதற்காக முதலாவது ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம் என்றும்,நமது ஆலயம் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் பாடுபட்ட முன்னோர்கள், முன்னாள் திருச்சபை ஆயர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவிக்கிறோம். நமது அலைன் சி.எஸ்.ஐ திருச்சபையின் 16 வது ஆண்டு திருச்சபை நாளை (CHURCH DAY) ஏப்ரல் 20–ம் தேதி கொண்டாட கர்த்தர் கிருபை பாராட்டினார். மேலும் நமது திருச்சபை தொடர்ந்து வளர்ந்திடவும்,அநேக அல் அய்ன் பட்டணத்தில் வாழும் மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைந்திடவும் ஊக்கமாக ஜெபிப்போம். நம் ஒவ்வொருவரையும் உன்னதமான ஆசீர்வதங்களினால் நிரப்பி, திருப்தியாக வழிநடத்துவாராக,



இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்

# ஆவியின் கனிகொடுக்கிறவர்களாய் மாறுவோம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துகள் . இந்த மாதத்தில் ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. வேதம் கூறுகிறது கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம் [கலாத்தியர்:25:22–26].

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் சொந்த ஆசைகள் விருப்பங்கள் எதிர்கால திட்டங்கள் உண்டு. இந்த ஆசைகளை முக்கியப்படுத்தி அதின்படி தான் வாழுவேன் என்றால் நம்மால் ஆவிக்கேற்றபடி வாழ முடியாது. ஆவியின் கனிகளை கொடுப்பது சுலபமான காரியம் அல்ல. நம்முடைய சொந்த ஆசை விருப்பங்கள் எல்லாவற்றையும் சிலுவையில் அறைந்து இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றும் போது மட்டுமே ஆவியின் கனிகளை கொடுக்க முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் "நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்". ஆம் அன்பானவர்களே கிறிஸ்துவின் சிலுவையை நாம் அனுதினமும்சுமக்க நம்மைஒப்புக்கொடுப்போம்.

சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும் அனுதினமும் முயற்சிப்போம். நாம் வாஞ்சிக்கும் போது நிச்சயமாய் நம்மையும் அதிக கனிகளை கொடுக்கிறவர்களாய் தேவன் மாற்றுவார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே தேவன் நம் ஒவ்வொருவரையும் தெரிந்துக்கொண்டு நாம் கனி கொடுக்கும்படிக்கும், நம்மில் கனி நிலைத்திருக்கும்படிக்கும் ஏற்படுத்தி இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்தூக்கி பார்ப்போமா? தேவன் நம்மை இரட்சித்து பல வருடங்கள் ஆகிறதல்லவா, நாம் எப்படிப்பட்ட கனிகளை கொடுக்கிறோம்? தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத்திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? என்று தேவன் கேட்டது போல இன்று நம்மை பார்த்துக் கேட்கிறார். நாம் எங்கு நாட்டப்பட்டிருக்கிறோமோ அதற்கேற்ற கனிகளை கொடுப்போம். உலகத்தில் நிலைத்திருந்தால் உலகத்திற்கேற்ற கனிகளை கொடுப்போம். தேவனில் நிலைத்திருந்தால் தேவனுக்கேற்ற ஆவியின் கனிகளைக் கொடுப்போம். நாம் தேவனில் ஐக்கியப்பட்டு நிலைத்திராமல் ஒருநாளும் கனிகொடுக்க முடியாது. வேதம் கூறுகிறது "நல்ல கனிகொடுக்காத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" இந்த எச்சரிப்பின் தொனி ஒவ்வொரு நாளும் நமக்குள் தொனிக்கட்டும். இயேசு கிறிஸ்துவில் கொடியைப் போல ஐக்கியப்பட்டு வாழ்ந்து கனிகொடுக்கிறவர்களாய் மாறுவோம். பழுத்த பழங்கள் நிறைந்த மரங்கள் மனிதர்களுக்கு பறவைகளுக்கு என எல்லாருக்கும் உபயோகமாய் இருக்கும். அதுபோல நாமும் ஆவியின் கனிகளால் நிறைந்து தேவனை அறிந்தவர்களுக்கு மட்டுமல்ல புறஜாதிகளுக்கும் உபயோகமாய் மாறுவோம். நம்முடைய பிதாவானவர் விரும்புகிறபடி இயேசுவை பிரதிபலித்து அதிக கனிகளை கொடுத்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். தேவன் நாம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

ARTICLE BY

## Mr. Ashok Kumar

MEN'S FELLOWSHIP

# 3 Valuable Lessons I Learned from a 40 Day Fasting



A few years ago I embarked on a 40 day food fast. I began the fast with a motive of calming fears and anxieties but ended it learning even more than that.
I drank mostly water and fruit juice, some almond milk, and some light broth. It was definitely a test. Physical hunger pangs only happened during the first three days. After that, my body didn't seem to want solid food anymore. But that doesn't mean it was easy. After the first three days, I still had to deal with the habit of wanting food at mealtime and emotional hunger.

During Lent, it's a good time to think about what God desires when we fast. Jesus did call us to fast at times, even though he didn't say that it had to be during the Lenten period. He also told us to not be obvious when we're fasting. In other words, don't go around bragging about the fast or speaking about it in order to get pity. When you give something up, let it be so that the Lord can teach you something, not so that you can boast or draw attention to yourself in any way. So, I hope that sharing my experience isn't boasting but rather sharing what I learned in order to help others.

## 1. Lasting Sustenance


Going without solid food taught me to look to God for my strength and sustenance. Most importantly though, it taught me to look to God for my emotional sustenance. This is probably the biggest reason that God does want us to fast from time to time so that we learn to look to the One who can help us in all situations instead of looking toward something else that can only help momentarily.

## 2. A Humble Spirit

Fasting, whether it is all food or just certain things, should cause me to look within myself. Look within to what motivates me to do things. Pay attention to what causes me to quarrel and argue with other people. Notice what brings me disharmony. Usually what causes a lack of peace in my spirit is my own unsatisfied wants. A humbler spirit should be the result of a time of fasting. A spirit that puts God's will above my own where it should be and places what other people's need ahead of my own wants.

## 3. An Other-Focused Mentality

Loving and seeking to understand other people is the second greatest commandment. Changing my thinking and my ways to seek to put others' needs ahead of my own and not only helps those people but it also helps me.




Article by

**MRS. PAMELA DANIEL**

WOMEN'S Fellowship



# யாருக்குத் தெரியும்?
# WHO KNOWETH!

கிறிஸ்தவர்களாகிய பலருக்கு இந்த வார்த்தையை படித்ததும் திருமறையில் ஒருவர் மாத்திரமே நம் நினைவிற்கு வருவார். அவர் யார்? சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலி ருந்து எழும்பும். நினைவு வந்திருக்கும் அகாஸ் வேறு ராஜாவின் அரண்மனையில் நடந்தது

### 1. கீழ்ப்படிதல்:

தாழ்விலிருந்து உயர்த்தப்படுதல். எஸ்தர்:ராஜாவின் பிரதானி யேகாய் நியமித்த காரியம் அல்லாமல் மற்றொன்றையும் கேட்கவில்லை. (எஸ்தர் 2:15) மற்றவர்கள் கேட்டு பெற்றுச் சென்றார்கள். (எஸ்தர்2:13) எஸ்தர்:தன்னை வழிநடத்தின பிரதானியின் சொல் கேட்டதால் மற்ற எல்லாருடைய கண்களிலும் தயை பெற்றாள்.

### 2. உபவாசமிருத்தல்:

ராஜாவை சந்திக்க முதலாவது தானும், தனது தாதி மாறும் உபவாசமிருந்தனர்.

### 3. விண்ணப்பம் செய்து மன்றாடுதல்:

தன்னை வளர்த்தவரின் சொல் கேட்டு ராஜாவினிடத்தில் விண்ணப்பிக்கவும் மன்றாடவும் செய்கிறார். இதனால் தன் உயிர் போனாலும் பரவாயில்லை என (செத்தாலும் சாய்கிறேன்) செயல்பட்டார். உபவாச காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் ஆண்டவருக்கு கீழ்படிகிறோமா? ஏலியன் பேச்சைக் கேட்டு, கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றார் சாமுவேல்.

உபவாசமிருந்தனர்: நினைவே மக்கள் ராஜா முதல் மிருக ஜீவன்கள் வரை இரட்டுடுத்தி உபவாசித்ததால் காப்பாற்றப்பட்டார்கள்.

விண்ணப்பம் செய்து மன்றாடுதல்: தானியேல் தனது நண்பர்களோடு மூன்று வேளையும் விண்ணப்பித்து மன்றாடி தன் காரியங்களை ஜெயமாக்கினார்கள். அன்பானவர்களே,

நாம் ஆண்டவருக்கு கீழ்படிகிறோமா, உபவாசிக்கின்றோமா,விண்ணப்பம் செய்து மன்றாடுகின்றோமா, யாருக்காக நமக்காக, நம் குடும்பத்திற்காக, நம் திருச்சபைக்காக, நம் சொந்தங்களுக்காக, நம் தேசத்திற்காக? சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

பிரசிங்கி துவங்கும் போது மாயை மாயை எல்லாம் மாயை என்கிறார். மாயையான உலகில் வாழ்கின்ற நமக்கு ஆண்டவருடனான உறவு,அவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிதல்,உபவாசமிருத்தல், விண்ணப்பம் செய்து மன்றாடுதல். இப்படி வாழவே ஆண்டவர் நம்மை அழைக்கின்றார் அர்ப்பணிப்போமா! சிந்திப்போம் செயல்படுவோம்.

ARTICLE BY

YOUTH FELLOWSHIP




16TH CHURCH DAY



# DIETARY GUIDELINES TO LOWER BLOOD PRESSURE

ARTICLE BY
Mrs. Jackulin Havin

If your blood pressure is not too high you may able to control it by changing your eating habits, achieving a healthy body weight and getting physical activity.

Eating plan is rich in fiber, potassium, calcium and magnesium and it is low in fat, saturated fat and salt. So it can also lower your risk of heart disease.

## HOW TO START ON EATING PLAN?

It's easy to adopt the eating plan. Here are some ways to get started… Change gradually.



### TO INCREASE YOUR VEGETABLES INTAKE, YOU COULD:

- Snack on sliced cucumber, carrots, celery and low fat cheese.
- Include vegetables soup as on entrée or as part of a meal.
- Add spinach, okra, mushroom or grated carrot.

### TO INCREASE YOUR FRUIT INTAKE, YOU COULD:

- Have a fruit salad for desert or with breakfast cereal
- Take an apple or banana with your to work or when you are heading out for a snack.
- Make sliced fruit platter when you have guests over for afternoon tea.

### TO INCREASE YOUR INTAKE OF FAT-FREE LOW FAT MILK AND MILK PRODUCTS:


- Add milk and/or yoghurt to your breakfast cereal, with rice at lunch or as desert after dinner.
- Have a glass of warm milk, or fresh laban or yoghurt before sleep.
- Choose low fat sliced or Feta cheese in a sandwich instead of meat/chicken.

When you are shopping look for margarine and salad dressing lowest in saturated fat and that are Trans fat free.



## REDUCE THE SALT AND SODIUM: 

- Use spices instead of salt. In cooking and at the table, flavor foods with herbs, spices, lemon, lime, vinegar, or salt-free seasoning blends.
- Look for low or reduced sodium, or no added salt dressings, sauces, breakfast cereals, frozen meals, soups, canned and processed foods.
- Choose fresh, frozen, or canned (low-sodium or no-salt-added) vegetables.
- Use fresh poultry, fish, and lean meat, rather than canned, smoked, or processed types
















- Limit your intake of: - Processed foods (such as mortadella, sausage, hotdog, canned tuna) - Foods packed in brine (such as pickles, pickled vegetables, olives) - Condiments (such as mustard, ketchup, and barbecue sauce)
- Beware of the sodium content of soy, fish or teriyaki sauce (even low salt versions) and use sparingly.
- Cook rice, pasta, and hot cereals without salt. Avoid instant noodles, instant or flavored rice, pasta, and cereal mixes as these are all usually high in sodium.
- Rinse canned foods, such as tuna and canned beans, to remove some of the sodium.





Aim to drink water preferably, try adding a slice of lemon or lime with ice for some flavor. - Aim for 30minutes per day of physical activity, try a brisk walk for 15minutes morning and night.


# PRIMARY -A-





Kid Name : Samuel Hebron







Kid Name : **HaryterSamuel**




Teacher - **Mrs. Segena Livingston**

# PRIMARY B

## *TEACHER – MRS. RENA JOSE*




*BERNICIA LEENUS OBED*




CHRIS GABRIEL

"For I know the plans I have for you", declares the LORD, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

Jeremiah 29:11



Jania Preni

It is written, 'Man shall not live by bread alone, but by every word of God.

-Luke 4:4



JEHOASH JOHN

csitamilparishalain.org

# March Manna Winners

## FIND THE WAY

- ELFINA
- JOHAN SANJO
- JANIA PRENI
- PRISCILLA

## KIDS COLOURING

- ELFINA
- JANIA PRENI
- JESSICA

## CROSS WORD

- ELFINA
- JOHAN SANJO
- REGAN SHAN

## WORD SEARCH

- ELFINA
- JOHAN SANJO
- JANIA PRENI
- PRISCILLA

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

To Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



# JOSHUA 13-24

## யோசுவா 13–24

MAY '24 - QUESTIONS

1. இஸ்ரவேலரால் வெட்டப்பட்ட குறிகாரனின் தகப்பன் யார்?
2. காலேபுக்கு கிடைத்த சுதந்தரம் எது?
3. அக்சாள் கணவர் பெயர் என்ன?
4. எப்பிராயீம் புத்திரரின் கிராமங்கள் யாருடைய சுதந்திரத்தின் நடுவே இருக்கிறது?
5. மலைத்தேசமும் உங்களுடையது என்று யோசுவா யாரிடம் கூறினார்?
6. இஸ்ரவேலரின் பங்குவீதத்தைப் பிரிக்க சீட்டு எங்கே போடப்பட்டது?
7. யோசுவா எந்தப் பட்டணத்தைக் கட்டி அதில் குடியிருந்தார்?
8. கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எங்கிருந்து மூப்பரிடம் சொல்ல வேண்டும்?
9. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியிருந்த வார்த்தைகள் ஒன்றும் தவறிப் போகவில்லை?
10. பீடத்தின் பெயர் என்ன?
11. இஸ்ரவேலரின் கண்களுக்கு முள்ளுகளாக இருப்பவர்கள் யார்?
12. உயிரற்ற பொருள் ஒன்று சாட்சியானது அது எது?

QUIZ TIME

### மார்ச்- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யோசு 1:13,15 | 2. யோசு 2:17 | 3. யோசு 3:15 | 4. யோசு 4:17 | 5. யோசு 5:13
6. யோசு 6:17,25 | 7. யோசு 7:26 | 8. யோசு 8:30 | 9. யோசு 9:12 | 10. யோசு 10:33 |
11. யோசு 11:5 | 12. யோசு 12:24

திருமதி.பிப்ளின் நெல்சன், திருமதி.பியூலா ஏசுராஜ், திருமதி.பிரிசில்லா தர்மராஜ்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / MARCH'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

# Kids Coloring



## Find the Word

Name : ..............................



Bible Pathway Adventures
WORKSHEET

# Samson word scramble

Read Judges 13-16.
Unscramble the words below.

1. tmlepe: ______
2. smoasn: ______
3. tminah: ______
4. ellidah: ______
5. pihinsltie: ______
6. narztiae: ______
7. vrneyiad: ______
8. nilo: ______
9. itarseiie: ______
10. hria: ______

# WORD SEARCH



Bible Pathway Adventures

WORD SEARCH

## SAMSON

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | X | R | I | D | D | L | E | O | F | J | G | R | H | H | N | D | S | P | P |
| Y | S | Z | F | I | D | H | C | W | X | O | S | F | V | S | O | Q | T | X | H |
| E | D | O | S | J | O | X | A | E | W | T | X | M | C | A | V | N | R | Q | I |
| S | W | T | C | D | N | L | V | Z | W | C | Y | E | T | M | H | C | E | K | L |
| H | H | M | N | R | K | S | E | R | K | T | A | C | S | S | G | N | N | Y | I |
| U | O | O | C | E | E | L | D | M | J | Z | X | J | F | O | Z | T | G | D | S |
| A | Q | C | R | C | Y | Q | R | U | X | Y | S | H | O | N | B | W | T | T | T |
| Q | Q | E | Q | H | Y | C | N | L | U | F | D | K | J | S | I | E | H | B | I |
| U | T | N | A | Z | A | R | I | T | E | V | E | J | L | W | L | D | V | J | N |
| V | A | O | K | T | I | L | Q | V | Z | D | L | S | G | W | B | D | E | R | E |
| E | U | G | G | H | A | X | T | E | R | T | I | X | U | R | C | I | O | T | S |
| X | A | L | P | V | L | V | N | B | A | R | L | I | P | Y | D | N | W | R | H |
| F | S | M | F | J | A | W | B | O | N | E | A | Z | H | Z | C | G | G | A | M |
| A | L | D | A | I | Z | K | U | A | X | P | H | O | E | I | O | G | A | Z | F |
| L | H | G | V | W | V | I | N | E | Y | A | R | D | B | D | F | U | Z | S | B |
| Y | L | P | Y | Z | G | V | F | U | S | F | Z | T | B | H | A | E | F | D | C |
| Q | K | V | L | I | O | N | V | D | Q | Z | Z | W | E | C | T | S | G | D | T |
| E | U | X | V | I | S | R | A | E | L | I | T | E | S | W | K | T | F | M | B |
| X | H | F | N | J | V | T | T | E | M | P | L | E | W | F | C | S | D | W | H |
| M | O | G | R | P | X | S | H | D | N | M | A | N | O | A | H | Y | B | N | H |

JAWBONE
LION
NAZARITE
RIDDLE
WEDDING GUESTS
PHILISTINES
HONEY
VINEYARD
DELILAH
TEMPLE
FOXES
SAMSON
ISRAELITES
STRENGTH
CAVE
DONKEY
YESHUA
MANOAH




Name : ..............................................................................

# CROSS WORDS

Name : ..............................................................

# Samson



**ACROSS**

2 God told Samson's parents to consecrate him as a ________

4 _______ deceived Samson into telling her the secret of his strength

8 Samson's wife was a _________

9 Samson caught 300 ______ and tied torched to their tails

**DOWN**

1 Samson knocked down the two _____ of the Philistine temple

3 Samson carried away the _____ of the city Gaza

4 Samson killed a thousand men with the jaw of a ______

5 Samson ate _____ out of the carcass of a dead lion

6 Samson killed a ______ with his bare hands

7 Samson's wife told the answer to his _____ to the Philistines.

# MAY - 2024

| | |
|---|---|
| 01-MAY | Master. Joyson Stubert S/o Mr. Kingsly Stoobert |
| 01-MAY | Ms. Alen Maisie D/o. Mr. Alvin Kumar Asirmanns |
| 02-MAY | Master. Gain S/o. Mr. George Rose |
| 03-MAY | Mr. S. Ashok Kumar |
| 05-MAY | Mr. Appavoo Nicson Kennedy |
| 05-MAY | Mr. Stephen Pradeepkumar |
| 05-MAY | Mrs. Lavanya Kannan W/o Mr. Kannan. A.S |
| 06-MAY | Ms. Shaana Liliya D/o Mr. Simeyon. S. |
| 07-MAY | Rev. S.P. Baskar |
| 08-MAY | Mr. K. Arunkumar |
| 08-MAY | Ms. Jesil Bernice D/o Mr. Herchil Harish |
| 10-MAY | Mrs. Beula Rani Livingston |
| 11-MAY | Mr. Rajesh ChellaDurai |
| 11-MAY | Mr. Jose Selva Kumar |
| 12-MAY | Mr. Suresh Babu |
| 13-MAY | Mr. Selvistor Solomon |
| 15-MAY | Mr. George Rose |
| 16-MAY | Mr. Selva Kumar |
| 16-MAY | Mrs. Nirmala Jenifer Paul |
| 17-MAY | Mrs. ArputhaMary Sandanam |
| 17-MAY | Master. B. Briston Isac S/o Mr. Berlin Jose. I |

# MAY - 2024

| | |
|---|---|
| 18-MAY | Mr. R. Aruldhas |
| 19-MAY | Mr. T. Robert Wilson |
| 19-MAY | Mr. P. Vijinraj |
| 19-MAY | Mrs. Salini Vimala Kingsly |
| 20-MAY | Mr. B. Pushparaj |
| 20-MAY | Ms. Felicia Leenus Obed D/o Mr. Leenus Patrick Obed |
| 21-MAY | Mrs. Indira Israel |
| 22-MAY | Mrs. Iswarya Obed |
| 22-MAY | Master. J.S. Inian Immanuel S/o Mr. Stephen Chellaraj |
| 23-MAY | Mr. C. Havin Heba |
| 26-MAY | Ms. J.H. Juana D/o Mr. Jayan Dharmaraj |
| 28-MAY | Mr. Suresh Rajan |
| 29-MAY | Ms. J.V. Kerenhappuch Abiah D/o Mr. Jeyakumar |
| 29-MAY | Ms. Rishita Kannan D/o Mr. Kannan. A.S |
| 29-MAY | Master. Advik Bryan D/o Mr. Arun Kumar. V |
| 30-MAY | Ms. Aashika Arun Kumar D/o Mr. Arun Kumar. V |

*Wish you many more happy returns of the day God bless you all*

# MAY *Wedding* ANNIVERSARY

**04-MAY**
Mr. Lawrence Gamberam
&
Mrs. Augusta Lawren

**06-MAY**
Mr. R. Aruldhas
&
Mrs. Prasana

**08-MAY**
Mr. Thanu Lingam
&
Mrs. R. Preeda Nancy

**12-MAY**
Mr. Selva Kumar
&
Mrs. Radhika Grace Selva Kumar

**13-MAY**
Mr. John Joseph
&
Mrs. Jessy Beula John Joseph

**16-MAY**
Mr. S. Simeyon
&
Mrs. J.N. Basil Shallu

**19-MAY**
Mr. Jose Selva Kumar
&
Mrs. Rena Ivolet Jasmine

**25-MAY**
Mr. David Sornabalan
&
Mrs. Yesubai

**25-MAY**
Mr. Antony Jesu Rajan
&
Mrs. Jamuna Rani

**25-MAY**
Mr. P. Vijinraj
&
Mrs. J.P. Pamela Jennifer

**26-MAY**
Mr. Y. Mesiah Das
&
Mrs. Suja Jasmine Mesiah

**26-MAY**
Mr. Rajesh ChellaDurai
&
Mrs. Shalini

**31-MAY**
Dr. Livingston Samuel
&
Mrs. Segena Livingston

# VBS-2024 (DAY-1)



# VBS-2024 (DAY-2)



# VBS-2024 (DAY-3)



# VBS-2024 (DAY-4)













# VBS-2024 (PICNIC)





















# VBS SPECIAL SERVICE

































# WOMEN'S FELLOWSHIP SERVICE







**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**

